தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21-1-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் விஞ்ஞானிகளுக்கான பண்ணைய முறைகள் பற்றிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி**

இளம் வேளாண் விஞ்ஞானிகளுக்கு ''வருங்காலத்திற்கேற்ற பண்ணையத்திட்டத்தின் பயன்பாடு'' பற்றிய அகில இந்திய அளவிலான 21 நாள் பயிற்சி முகாமானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உழவியல் துறையிலுள்ள விஞ்ஞானிகளின் திறன் மேம்பாட்டு பயிற்சி மையத்தின் மூலமாக 20-1-2016 அன்று தொடங்கப்பட்டது.

இப்பயிற்சிக்கு இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் நிதி உதவி அளித்துள்ளது. இப்பயிற்சியில் 9 மாநிலங்களிலிருந்து 20 விஞ்ஞானிகள் பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்சியை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் தலைமையேற்று துவக்கி வைத்தார்.

துணை வேந்தர் அவர்கள் துவக்க உரையின்போது பல்வகையான பண்ணை தொழில்களை ஒருங்கிணைப்பதன் அவசியத்தையும் ஒருங்கிணைந்த பண்ணையத்திட்டமானது வருங்காலத்திற்கேற்ற சந்தை வாய்ப்புகளை பயன்படுத்தும் விதமாகவும், குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்வனவாகவும் மேலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கேற்ற நவீன தொழில் நுட்பங்களுடனும் இருக்க வேண்டும் என கூறினார். குறைந்து வரும் இயற்கை வளங்களினால் பயிர் சாகுபடியிலிருந்து தொழில் சார்ந்த பண்ணையத்திற்கேற்ற மாற்று பண்ணையத் திட்டங்களின் அவசியத்தை வலியுறுத்தியதுடன், இம்முயற்சியினால் அரசின் கொள்கை மற்றும் புதிய சந்தை வாய்ப்புகளை, புதிய தகவல் தொழில்நுட்பங்களை கொண்டு விவசாயிகள் அறிவதன் மூலம் அதிக நிகர லாபத்தை பெற முடியும் என்று எடுத்துரைத்தார். மேலும், முன்னிலை தொழில் நுட்பங்களான புதிய பயிர்

இரகங்கள் வெளியிடுதல் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை உருவாக்குதல் போன்றவற்றை விவசாயிகள் பங்கேற்புடன் பிரபலபடுத்துவதன் மூலம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகமானது நாட்டின் முன்னோடி பல்கலைக்கழகமாக அமைய ஏதுவாகிறது என்றுரைத்தார். பருவகால மாற்றத்திற்கேற்ப புதிய தொழில் நுட்பங்களுடன் கூடிய எதிர்கால பண்ணையத் திட்டத்தின்படி விவசாயிகள் செயல்பட வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் விரிவாக்க அலுவலர்கள் வழிகாட்டுவதன் மூலம் விவசாயிகள் அதிக லாபம் பெற முடியும் என்றும் கூறினார்.

பயிர் மேலாண்மை இயக்குனர் முனைவர் சி. ஜெயந்தி அவர்கள் உரையாற்றுகையில் பல்வேறு வேளாண் காலநிலை மண்டலங்களுக்கான ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தின் அவசியம் மற்றும் பயன்பாடு பற்றியும் எடுத்துரைத்தார்.

உழவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ர. வெங்கிடசாமி அவர்கள் வரவேற்புரையாற்றி பயிற்சி பற்றிய விளக்கங்களை வழங்கினார். நிறைவாக இப்பயிற்சியின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் முனைவர் கு. இரா. லதா அவர்கள் நன்றியுரையாற்றினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்